S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு” திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE ஞாயிறு டிசம்பர் 21 * 2025 * மலர் -1 * இதழ்-203* VOL-1 * ISSUE-203 விலை ரூ.3 * பக்கம் -4

## நாகை மீன்வள பல்கலைக்கழகத்தில் விழா:

# நாகூர் ஹனிபா நூற்றாண்டு விழா பூங்கா திறப்பு!

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார் ; நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்!!



**வேதாரண்யம், டிச. 21–**

தமிழக துணை முதல் அமைச்சரும், தி.மு.க. இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் நேற்று சென்னையில் இருந்து திருச்சி வழியாக திருவாரூருக்கு சென்றார்.

பின்னர் திருவாரூர் அருகே காட்டூரில் அமைந்துள்ள கலைஞர் கோட்டத்துக்கு வந்தார். அங்கு அமைக்கப்பட்டுள்ளசிறுவர்பூங்காவை திறந்து வைத்தார்.

அப்போது குழந்தைகளுடன் கைகுலுக்கி புகைப்படம் எடுத்துக் கொண்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

தொடர்ந்து அஞ்சுகம் அம்மையார் திருமண அரங்கில் மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் மறைந்த திருவிடம் படத்தை திறந்து வைத்து பேசினார். பின்னர் இரவு வேளாங்கண்ணியில் உள்ள தனியார் விடுதியில் தங்கினார்.

இதைத்தொடர்ந்து இன்று காலையில் பிரபல பாடகர் நாகூர் ஹனிபா நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டார்.

இஸ்லாமிய, திராவிட இயக்கப் பாடல்கள் பாடியதன் மூலம் புகழ் பெற்றவர் நாகூர் ஹனிபா. தமிழக சட்டப்பேரவை மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாடு வக்பு வாரியத் தலைவராகவும் மக்கள் பணியாற்றி உள்ளார். இவர் 2015ல் தனது 90வது வயதில் உடல்நலக்குறைவால் உயிரிழந்தார்.

இந்நிலையில், அவரது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாகூரில் அவரது வீடு அமைந்துள்ள தைக்கால் தெருவுக்கு ‘இசை முரசு நாகூர் ஹனிபா தெரு’ என்று பெயர் வைக்கப்படும் என்றும், ரூ.2 கோடியில் மேம்படுத்தப்பட உள்ள நாகூர் சில்லடி கடற்கரையில் அமைக்கப்படும் பூங்காவுக்கு நாகூர் ஹனிபா பெயர் வைக்கப்படும் என்றும் தமிழக அரசு கடந்த ஆண்டு அறிவித்தது.

அதன்படி, அவரது வீடு உள்ள தெருவுக்கு நாகூர் ஹனிபா பெயர் சூட்டப்ப ட்டது.

இந்நிலையில், நாகூர் ஹனிபாவின் நூற்றாண்டு விழா, நாகையில் உள்ள மீன்வளப் பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெற்றது. இதில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு, நாகூர் ஹனிபாவின்குடும்பத்தினரை கவுரவித்துப் பேசினார். பின்னர் நாகூர் ஹனிபா பெயர் சூட்டப்பட்ட பூங்காவையும் திறந்து வைத்தார். பின்னர் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு நாகை தளபதி அறிவாலயத்தில் இளைஞர் அணி நிர்வாகிகளை சந்தித்து பேசுகிறார். அங்கு இளைஞர் அணி நிர்வாகிகளுடன் இணைந்து மதிய உணவு சாப்பிட்ட பின்னர் திருவாரூர் வழியாக திருச்சி புறப்பட்டு செல்கிறார். துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின்வருகையை முன்னிட்டு தஞ்சை சரகத்தில் இருந்து 1200 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர்.

முன்னதாக இன்று காலையில் நாகை துறைமுகத்தில்பாய்மரவிளையாட்டு நிகழ்ச்சியை உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.



கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம்) தர்மபுரி மண்டலம் சார்பாக தற்சமயம் இயக்கப்பட்டு வரும் மகளிர் விடியல் பயணம் செய்யும் பழைய பேருந்துகளுக்கு பதிலாக 10 புதிய நகர பேருந்து சேவைகளை கலெக்டர் தினேஷ்குமார், மதியழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் தொடங்கி வைத்தனர். அருகில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக மண்டல பொது மேலாளர் மோகன்குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் ரிப்பன் கட்டட மாமன்றக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார் , ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் அறிவுறுத்தலின்படி, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, குப்பை கொட்டுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு வருகின்றது. அதன்படி, மத்திய மண்டலம், வார்டு எண்.65க்குட்பட்ட ராமநாதபுரம், முனுசாமி நகர் பகுதியில் சாலையில் குப்பை கொட்டியவருக்கு ரூ.10,000/ அபராத தொகை சுகாதார ஆய்வாளர் ஜெகநாதன் விதிக்கப்பட்டது.

## எக்ஸ்பிரஸ் ரெயில் மோதி 8 யானைகள் சாவு!

### 5 பெட்டிகள் தடம் புரண்டன!!



**கவுகாத்தி, டிச. 21–**

அசாம் மாநிலத்தில் உள்ள ஜமுனா முக்–காம்பூர் பகுதியில் நேற்று அதிகாலை 2.17 மணியளவில் சாய்ரங்–புதுடெல்லி ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரெயில் யானைக் கூட்டம் மீது மோதியது. இதில் 8 யானைகள் உயிரிழந்தன. ரெயில் என்ஜின் மற்றும் 5 பெட்டிகள் தடம் புரண்டன. இந்த விபத்தில் சிக்கிய ஒரு யானைக் குட்டி காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளது.

யானைகள் உள்ளிட்டவை வாழும் பகுதிகளில் ரெயில்களை கவனமாக இயக்க வேண்டும் என்று ஏற்கனவே அறிவுறுத்தப் பட்டுள்ளது. எனினும் அவ்வப்போது அசம்பாவிதங்கள் நடந்து விடுகின்றன.

மிசோரமின் தலைநகரானஐஸால் அருகே உள்ள சாய்ரங்கில் இருந்து டெல்லியில் உள்ள ஆனந்த விகாருக்கு ராஜ்தானி எக்ஸ்பிரஸ்ரெயில்சென்று கொண்டிருந்தது. வடகிழக்கு எல்லைப் பகுதி ரெயில்வேயின் லும்டிங் கோட்டத்தைச் சேர்ந்த ஜமுனா முக்–காம்பூர் பகுதியில் இன்று அதிகாலை 2.14 மணி அளவில் சென்று கொண்டிருந்த போது யானைக் கூட்டம் மீது ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரெயில் மோதியது.

முன்னதாக எமர்ஜென்சி பிரேக்கை ரெயில் ஓட்டுநர் பிரயோகித்தார். எனினும் யானைக் கூட்டத்தின் மீது, வேகமாகச்சென்றுகொண்டிருந்த ரெயில் மோதிவிட்டது. இந்த விபத்தில் 8 யானைகள் உயிரிழந்தன. ரெயில் என்ஜின் மற்றும் 5 பெட்டிகள் தடம் புரண்டன.

இந்த விபத்தில் ஒரு யானைக் குட்டி காயங்களுடன் மீட்கப்பட்டது.

தடம் புரண்ட பெட்டிகளைகழற்றிவிட்டுவிட்டு இன்று காலை 6.11 மணியளவில் ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரெயில் கவுகாத்தியை நோக்கிப் புறப்பட்டது. யானைகள் உள்ளிட்ட விலங்குகள் வாழும் பகுதிகளில் ரெயில்களை கூடுதல் கவனத்துடன் இயக்க வேண்டும் என்பதை இன்று அசாமில் நடைபெற்றுள்ள விபத்து மீண்டும் உணர்த்தி உள்ளது.

ரெயில் ஓட்டுநர்களுக்கு இது தொடர்பாக ஏற்கனவே வழிகாட்டுதல் குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

இவற்றை முழுமையாகப் பின்பற்ற வேண்டும் என ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

## எண்ணம் கல்லூரியில் புதிய அரங்கு!

### எம்.பி.க்கள் திருமாவளவன், கணபதி ராஜ்குமார் திறந்து வைத்தனர்!!



எண்ணம் கல்லூரியில் புதிய அரங்கை விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் சிதம்பரம் பாராளுமன்ற உறுப்பினர் முனைவர் தொல் திருமாவளவன் மற்றும் கோவை பாராளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ராஜ்குமார் ஆகியோர் திறந்து வைத்தனர். அப்போது இக்கல்லூரியின் தாளாளர் மனோகரன் உடனிருந்தார்

## பண்ருட்டி இரமேஷ் குடும்பத்துக்கு ரூ.1 லட்சம்!

### சேலம் மாவட்ட சமூக பெண்ணுரிமை சமூக போராளி காயத்ரி வழங்கினார்!!

**சென்னை,டிச.21**



விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நிறுவனர் மற்றும் தேசிய தலைவர் எழுச்சித் தமிழர் திருமாவளவன் அவர்களின்அறிவுறுத்தலின் படி, கட்சியின் சமூகப் பொறுப்புணர்வை பிரதிபலிக்கும் வகையில் நிதி மற்றும் இரங்கல் நிகழ்ச்சி மாநிலம் முழுவதும் நடைபெற்றுவருகிறது.

அதன் தொடர்ச்சியாக, சேலம் மாவட்ட சமூக பெண்ணுரிமை சமூக போராளி தோழர் கி. காயத்ரி , பண்ருட்டி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொறுப்பாளர்மறைந்த தோழர்இரமேஷ் அவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.1 லட்சம் நிதியுதவியை வழங்கி ஆறுதல் தெரிவித்தார். மாரடைப்பால் அண்மையில் காலமான இரமேஷ் அவர்களின் மறைவு, கட்சியினருக்கும் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் பேரிழப்பாகும்.

இவரைஇழந்ததுயரத்தில்கடுமையான மன உளைச்சலால் உடல் நலக்குறைவுக்குளான அவரது மனைவி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரது சிகிச்சை செலவுக்காகவும், குடும்பத்தின் நலனுக்காகவும் இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

விடுதலை சிறுத்தைகள் கட்சி எப்போதும் சமூகநீதி, சமத்துவம், மனிதநேயம் போன்ற அடிப்படைக் கோட்பாடுகளில் உறுதியாக நிற்கும் இயக்கமாக விளங்குகிறது.

துயரங்கள் நேர்ந்த பொதுமக்களுடன் தோளோடு தோள் நின்று செயற்படும் அரசியல்பண்பைமீண்டும்வலியுறுத்தும் விதமாக இந்த செயற்பாடு அர்த்தமுள்ள ஒன்றாக அமைந்துள்ளது.

தேசிய தலைவர் திருமாவளவன் வழிகாட்டுதலின்கீழ்காயத்ரிஅவர்களின் சமூகப் பணி மாநிலம் முழுவதும் பாராட்டுக்குரியதாகப்பெரும்கவனத்தை பெற்றுள்ளது.

மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் மற்றும் சமூக அமைப்புகள் இவரின் செயற்பாட்டிற்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.



# ரூ.13.30 லட்சம் மதிப்பீட்டில் நியாய விலை கடை; ஊராட்சி ஒன்றிய குழு தலைவி திறந்து வைத்தார்!

**தென்காசி டி.21**

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவி குறிப்புகள் கட்டப்பட்டுள்ள நியாய விலை கடையை திறந்து வைத்து பொதுமக்களுக்கு ரேசன் பொருட்களை வழங்கினார் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஏழை எளிய மக்களின் பெயர் துடைக்கும் தலைவர் நம் தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் என தெரிவித்தார் இது பற்றிய விபரம் ஆவது தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட குறிப்பு குளத்தில் ரூபாய் 13.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலை கடையை ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவி திவ்யா மணிகண்டன் அவர்கள் பொதுமக்கள் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் திறந்து வைத்தார் பின்னர் நியாய விலை கடையில் பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கிய ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் என்ற முத்தமிழ் அறிஞர் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களால்கட்டமைக்கப்பட்ட சீறிய திட்டம்தான் அண்ணா மறுமலர்ச்சி திட்டம்199798 நிதியா ண்டில் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியால் தொடங்கப்பட்ட அண்ணா மறுமலர்ச்சித்திட்டம் கிராமப்புறங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும், பஞ்சாயத்து ராஜ்ஜியத்தை வலுப்படுத்துவதற்கும் கொண்டுவரப்பட்ட ஒரு திட்டம். இதன் நோக்கம், என்ன வெனில் கிராம பஞ்சாயத்துகளில் நியாய விலை கடைகள் கட்டுவது நூலகங்கள் அமைப்பது, குடிநீர் வசதிகளை மேம்படுத்துவது போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதே முக்கிய அம்சமாகும் கிராமப்புற மக்களின் சுயசார்பு மற்றும் சுய உதவிகளை ஊக்குவிப்பது, அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது. என முத்தமிழ் அறிஞர் மூத்த தலைவரின் ஆட்சியில் 199798 ம்ஆண்டு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. கிராமப்புற மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையால் செயல்படுத்தப்படுகிறது. உள்ளடக்கியவை: சாலை வசதி, குடிநீர் வசதி, நூலகங்கள் மற்றும் பிற அடிப்படை தேவைகளை மேம்படுத்துதல். இந்த திட்டம் இரண்டாம் கட்டமாகவும் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது, புதிய திட்டங்கள் (கலைஞரின் அனைத்து கிராமங்கள் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் போன்றவை) இதன் தொடர்ச்சியாகவே வருகின்றன.



# திருப்பத்தூர் பகுதியில் பள்ளியின் அருகே கழிவுநீர் கால்வாய் செல்வதால் மாணவர்கள் அவதி!

## நடவடிக்கை எடுக்க பொதுமக்கள், பள்ளி நிர்வாகம் கோரிக்கை!!

**திருப்பத்தூர் டிச.21**

திரும்பத்தூர்மாவட்டம்திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட புதுப்பே ட்டை ரோடு பகுதியில் அரசு நிதி உதவி பெறும் டிஎம்எஸ் தொடக்கப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி செயல் பட்டு வருகிறது. இந்தப் பள்ளி 50 ஆண்டுகளுக்கு முன்பு சுமார் 3 ஏக்கர் பரப்பளவில் தொடங்கப்பட்டது.

இந்த பள்ளியில் கடந்த 2019 ஆம் ஆண்டில் 800 மாணவர்கள் கல்வி பயின்று வந்தனர். தற்போது தொடக்கப் பள்ளியில் 50 மாணவர்களும் மேல்நிலைப் பள்ளியில் 175 மாணவர்கள் என மொத்தம் 225 மாணவர்கள் மட்டுமே கல்வி பயின்று வருகின்றனர்.

இதற்கு முக்கிய காரணம் கடந்த 2021 ஆம் ஆண்டில் புதுப்பேட்டை ரோடு பகுதியில் உள்ள ரயில்வே மேம்பாலம் அடியில் தேங்கி நிற்ககூடிய கழிவுநீர் மற்றும் சந்திரபுரம் பகுதியில் இருந்து வெளியேறும் கழிவுநீர் செல்வதற்காக கவுன்சிலர் பார்த்திபன் மற்றும் நெடுஞ்சாலை துறை அதிகாரி திராவிட மணி ஆகியோர்பள்ளியின்சுற்றுசுவரை இடித்து அவ்வழியாக கழிவுநீர் செல்ல வழிவகை செய்ததாக கூறப்படுகிறது.

இதனால் பள்ளிக்கு வரும் குழந்தைகளுக்கு அடிக்கடி பல்வேறு நோய் தொற்று ஏற்பட்டு சிகிச்சை பெறுவதால் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை எனக்கூறி மாணவர்களை வேறொரு மாற்றுப்பள்ளியில் சேர்த்துள்ளனர்.

இதனால் பள்ளியில் கல்வி பயில வரும் மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து தற்போது 800 மாணவர்கள் படித்த இந்த பள்ளியில் தற்போது 275 மாணவர்கள் படிக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது

இப்படியே கழிவுநீர் கால்வாய் பள்ளிக்கு அருகாமையில் சென்றால் தற்போது பள்ளிக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கையும் குறைந்து நாளடைவில் இந்த பள்ளி செயல்படாமல் போகும் அவல்நிலை உள்ளது என பொதுமக்களும் பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்களும் பள்ளி நிர்வாகிகளும் வேதனை தெரிவிக்கின்றனர். எனவே மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு உடனடியாக தமிழக அரசும், துறை சார்ந்த அதிகாரிகளும் இதனை சரிசெய்ய வேண்டும் என பொதுமக்களும், பள்ளி நிர்வாகமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மாநில அளவு ஸ்கேட்டிங் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற பெண்மணிகளுக்கு திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன் வாழ்த்து!

**திருப்பத்தூர் டிச.21**

திருப்பத்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தில், 5 டிசம்பர் முதல், 15 டிசம்பர் வரை நடைபெற்ற தேசிய அளவிலான ரோலர் ஸ்கேட்டிங் சாம்பியன்ஷிப் போட்டியில் , ரோலர் டெர்பி எனும் விளையாட்டில், 18 வயதுக்கு மேற்பட்ட பிரிவில், தமிழ்நாடு பெண்கள் அணியினர் வெள்ளி பதக்கம் வென்று, நமது நாட்டிற்கு பெருமையை சேர்த்துள்ளனர்.

இதில், திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த லக்கி ரோலர் ஸ்கேட்டிங் அகாடெமியில் ஸ்கேட்டிங் பயின்று வரும் மாணவிகள் ரக் ஷிதா , தாரிக்கா , நித்யா , ரேகா மற்றும் காஞ்சனா ஆகியோர் பங்கு பெற்று, நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர் . இந்த அபார வெற்றியை ஸ்கேட்டிங் பயிற்சியாளர் பிரபு மற்றும் பெற்றோர் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தனர். இது இவர்களின் மாபெரும் வெற்றி என்பது ஆகும் இந்த நிகழ்ச்சியின் வெற்றி பெற்ற மாணவிகளை திருப்பத்தூர் திமுக நகர செயலாளர் எஸ் ராஜேந்திரன் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

# வாணியம்பாடியில் தேசிய மின் சக்தி சிக்கன வார விழிப்புணர்வு பிரசுரம் விநியோகம்!



**வாணியம்பாடி டிச.21**

வாணியம்பாடியில் தேசிய மின் சக்தி சிக்கன வாரவிழாவைமுன்னிட்டு மின்சார துறை அதிகாரிகள் மின் சிக்கனம் குறித்து துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம்வழங்கி விழிப்புணர்வு மேற்கொண்டனர்.

தமிழ் நாடு மின் பகிர்மானகழகம், திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம் வாணியம்பாடி கோட்டம் சார்பில் தேசிய மின் சக்தி சிக்கன வார விழாவை முன்னிட்டுவிழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் மின்சார துறை அதிகாரிகள் மின் சிக்கனம் குறித்து வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# சதுரங்க ஜாம்பவான்கள் விஸ்வநாதன் ஆனந்த் , குகேஷ் பங்கேற்கும் ஏசியன் பெயிண்ட்ஸ்ன் புதிய 'அபெக்ஸ் அல்டிமா புரோடெக்' விளம்பரம்!



**சென்னை டிச.21**

ஏசியன் பெயிண்ட்ஸ் தனது புதிய பெயிண்ட் தயாரிப்பு 'அபெக்ஸ் அல்டிமா புரோடெக்'ஐ அறிமுகப்படுத்தி, தென்னிந்திய வீடுகளின் வெளிப்புறச் சுவர்களுக்கு மேம்பட்ட பாதுகாப்பை வழங்கும் கிராஃபீன் தொழில்நுட்பம் மூலம் புதியதரநிலையைநிறுவியுள்ளது. இந்த பெயிண்ட், மழை, வெயில், ஈரப்பதம் மற்றும் தூசிக்கு எதிரான 12 வருட செயல்திறன் உத்தரவாதத்துடன், வீட்டிற்கு நீண்டகால பாதுகாப்பையும் மனநிம்மதியையும் வழங்குகிறது. விளம்பரத்தில் சதுரங்க ஜாம்பவான்கள் விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் குகேஷ் டொம்மராஜு முன்னிறுத்தப்பட்டு, அறிவியல், வியூகம் மற்றும் கதைசொல்லல் மூலமாக கிராஃபீன் தொழில்நுட்பத்தின் பலன்கள் விளக்கப்படுகின்றன. சதுரங்கத்தில் எதிராளியின் நகர்வுகளை முன்கூட்டியே கணிப்பது போல, அபெக்ஸ் அல்டிமா புரோடெக் தீவிர வானிலை மாற்றங்களுக்கு முன்னெச்சரிக்கை மற்றும் சிறந்த பாதுகாப்பை அளிக்கும் என்பதை விளம்பரம் வலியுறுத்துகிறது. இந்த பிரசாரம் ஏசியன் பெயிண்ட்ஸ் எம்.டி. மற்றும் சி.இ.ஓ திரு. அமித் சிங், ஓகில்வி இந்தியா தலைமை வாடிக்கையாளர் அதிகாரி பி. ராமநாதன், மற்றும் படைப்பு குழுவினர் கிஷோர் மோகன்தாஸ், R. கார்த்திக், S. ஜனனி, கிருஷ்ண குமார் CG ஆகியோர் இணைந்து உருவாக்கியதாகும். தயாரிப்பு நிறுவனம் கோகனட் ஃபிலிம்ஸ், இயக்குனர் ராஜேஷ் ராமசாமி, தயாரிப்பாளர்கள் துஷார் ராவத் மற்றும் மினோதி ஆஷர் ஆகியோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

# "விரோஹன் $65 கோடி சீரிஸ் B: தாக்கம் செலுத்தும் சுகாதாரக் கல்விக்கான முன்னோடி முயற்சி"!

**சென்னை டிச.21**

VIROHAN

இந்தியாவின் முன்னோடி சுகாதாரக் கல்வி நிறுவனம் விரோஹன், தனது தற்போதைய சீரிஸ் B நிதி திரட்டும் சுற்றில் மைனாவி கார்ப்பரேஷன் தலைமையில் ரூ. 65 கோடி ($7.5 மில்லியன்) நிதியைப் பெற்றுள்ளது. இதில் ப்ளூம் வென்ச்சர்ஸ், பாரத் இன்க்ளூசிவ் டெக்னாலஜிஸ் சீட் ஃபண்ட், ரீபிரைட் பார்ட்னர்ஸ் உள்ளிட்ட தற்போதைய முதலீட்டாளர்களும் பங்கேற்றனர். இந்த நிதி, விரோஹனின் புத்தாக்க செயல்பாடுகள், இயக்க திறன் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை விருத்தி செய்யும் முக்கிய ஆதாரமாகும்.

விரோஹன், UPES, BBD பல்கலைக்கழகம், CMR பல்கலைக்கழகம், அஸ்ஸாம் டான் பாஸ்கோ பல்கலைக்கழகம், MIT பல்கலைக்கழகம், G.H. ரைசோனி பல்கலைக் கழகம், சில்வர் ஓக் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல முன்னணிஉயர்கல்விநிறுவனங்களுடன்கூட்டிணைந்து துணை நலவாழ்வு, செவிலியர் மற்றும் நலவாழ்வு மேலாண்மை கல்வி வழங்குகிறது. மேலும் தொழில் துறையில் லென்ஸ்கார்ட், மெடாந்தா, ஹெல்தியன்ஸ், டாக்டர் லால் பாத்லேப்ஸ் போன்ற முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து மாணவர்களுக்கு கல்வியிலிருந்து வேலைவாய்ப்பு வரை ஒரு முழுமையான பாதையை உருவாக்குகிறது.

# பிரிட்டானியா மில்க் பிக்கிஸ்: 'ஸ்பெஷல் எடிஷன் சூப்பர் ஸ்டார் பிஸ்கட்' வெளியீடு!

**தஞ்சாவூர் டிச.21**

அடேங்கப்பா கதைகள் 2.0 முன்முயற்சியின் வெற்றியுடன், பிரிட்டானியா மில்க் பிக்கிஸ் அதன் பேக்குகளில் புதிய ஸ்பெஷல் எடிஷன் சூப்பர் ஸ்டார் பிஸ்கட்டை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புதிய பிஸ்கட்,தமிழ்நாட்டுடன்பிரிட்டானியாவின்நீண்டகால பிணைப்பை மேலும் ஆழப்படுத்துவதோடு, தமிழின் பெருமை மற்றும் கதைசொல்லும் கலாச்சாரத்தை கொண்டாடுகிறது. நுகர்வோர் QR குறியீட்டை ஸ்கேன் செய்து சிறப்பு கதைகளை அறிந்து கொள்ளலாம்; பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் இதன் மூலம் பரிசுகள் மற்றும் ஹாங்காங்கிற்கு பயணவாய்ப்பையும் பெறலாம். டேலண்ட்டட் நிறுவனம் கருத்தாக்கிய இந்த முயற்சி,அடேங்கப்பாகதைகள்2.0இன்மையக்கருவாக உள்ளது. ஜெனரேட்டிவ் செயற்கை நுண்ணறிவு (GenAI) மூலம், அன்றாட பொருட்கள் மூலம் கதைகளில் கற்பனையை ஊக்குவித்து, குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு புதிய அனுபவங்களை வழங்குகிறது. ஸ்பெஷல் எடிஷன் பிஸ்கட் இந்த அனுபவத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு சென்று, புதுமை, விளையாட்டு மற்றும் படைப்பாற்றலை தமிழகம் முழுவதும் வீடுகளில் கொண்டு வருகிறது. பிரிட்டானியா நிறுவனத்தின் மார்க்கெட்டிங் பிரிவின் பொது மேலாளர் சித்தார்த் குப்தா கூறுகையில்: "பிரிட்டானியா மில்க் பிக்கிஸ் எப்போதும் தமிழக குடும்பங்களின் இதயங்களில்சிறப்பிடம்பெற்றுள்ளது. இந்தஸ்பெஷல் எடிஷன் பிஸ்கட் மூலம் மக்கள் மகிழ்ச்சியுடனும் கற்பனைமிக்க கதைகளுடன் இணைந்த அனுபவத்தை அனுபவிப்பார்கள். தமிழ்நாட்டுடன் நாங்கள் கொண்ட அழகிய பந்தத்தை இது மேலும் வலுப்படுத்துகிறது," என்று அவர் தெரிவித்தார்.



பேராசிரியர் க.அன்பழகன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வாணியம்பாடியில் உள்ள திருப்பத்தூர் மாவட்ட திமுக அலுவலகத்தில் அவரின் திருவுருவப் படத்திற்கு திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமானக. தேவராஜி அவர்கள் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார் இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், மற்றும் கழக முன்னோடிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.



கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கிருஷ்ணகிரி மின் பகிர்மான வட்டம் சார்பாக, தேசிய மின் சிக்கன வாரவிழா கடைபிடிக்கப்படுவதையொட்டி, தேசிய மின்சிக்கன வாரவிழா விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, கிருஷ்ணகிரி மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் கு.கண்ணன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் அன்னியூர் ஊராட்சியில் புதிதாக தொடங்கப்பட்ட முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான தேர்வு செய்யப்பட்ட இடத்தினை மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர்அன்னியூர் அ.சிவா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி, மண்டல இணை இயக்குநர்முனைவர்அ.மலர், மாவட்ட ஊராட்சிக்குழுதலைவர் ம.ஜெயச்சந்திரன், கல்லூரி முதல்வர் முனைவர் அசோகன் உட்பட பலர் உள்ளனர்.




# 1,739.வாக்காளர்கள் நீக்கம்;வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீட்டில் அதிர்ச்சி!

**திருப்பத்தூர் டிச.21**

திருப்பத்தூர் மாவட்டத்தில் திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, வாணியம்பாடி, ஆம்பூர் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் செய்ய மாவட்டம் முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட அரசு அலுவலர்கள் பணியில் ஈடுபட்ட நிலையில் ஒரு வாக்குச்சாவடிக்கு 1200 வீதம் மொத்தம் 1202 வாக்குச்சாவடி முகவர்கள் நியமிக்கப்பட்டு சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொண்ட நிலையில் திருப்பத்தூர் மாவட்டத்தில் 1 லட்சத்து 16 ஆயிரத்து 739 வாக்காளர்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் ஒன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிட்ட நிலையில் திருப்பத்தூர் மாவட்டத்திலும் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரும், மாவட்ட தேர்தல் அதிகாரி மான சிவசௌந்தரவல்லி வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்திற்கு பிறகு வரைவு வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரிடம் வாக்காளர் பட்டியலை வெளியிட்டார். அப்போது தேசிய, மாநில கட்சிகளை சேர்ந்த கட்சி பிரமுகர்கள், திமுக சார்பில் திருப்பத்தூர், ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி உறுப்பினர்கள் உட்பட பலர் பெற்றுக் கொண்டனர். இந்த பட்டியலில் மாவட்ட முழுவதும் இறந்தவர்களின் எண்ணிக்கை 34712, கண்டறியப்படாத முகவரியில் இல்லாதவர்கள் 29621, நிரந்தரமாக இடம் பெயர்ந்தவர் 43067, இரட்டை பதிவு 9339 ஆக மொத்தம் 1,16,739 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளது தெரியவந்தது. இதனால் அரசியல் கட்சியினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

# துபாய்: கிறிஸ்துமஸ் பருவத்தில் சிறப்பான உணவுப் அனுபவங்கள்!

**சென்னை டிச.21**

துபாய் நகரம் கிறி ஸ்துமஸ் பருவத்தின் மகிழ்ச்சியை அதன் பிரபல ஓட்டல்களில் பருவகால உணவு காட்சிகளுடன் கொ ண்டாடுகிறது. தி சென்ட் ரெஜிஸ் டவுன் டவுன் துபாய் மற்றும் Ginori Terrace கிறிஸ்துமஸ் ஈவ் நான்கு படி விருந்து மற்றும் கிறிஸ்துமஸ் தின பிரஞ்ச் நிகழ்ச்சிகளை நேரடி உணவு ஸ்டேஷன்கள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மற்றும்அழகாகஅலங்கரிக்கப்பட்டநீர்வழிக்காட்சிகளுடன் வழங்குகின்றன. ராயல் மன்சூர்முகேஷ்தனதுபிரபலஉணவகங்களில் மாராக்கன், பிரெஞ்சு மற்றும் இத்தாலி பருவகால தேர்ந்தெடுக்கப்பட்ட மனுக்களை வழங்கி, செஃப் ஹெ லின் கார்ரோஸ் தயாரித்த சிறப்பு கிறிஸ்து மஸ் தீவை இணைத்துள்ளது. அதே போல், Ciel Dubai Marina—இன் East 14, Palazzo Versace Dubai—இன் Giardino, மற்றும் Armani Hotel Dubai—இன் Armani/Mediterraneo விருந்தினர்களுக்கு குடும்ப நட்பு சர்வதேச பஃபே உணவுகளை, அழகான சூழல் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு விகிதங்களின் வழங்குகின்றன ரிக்ஸோஸ் பிரீமியம் சாதியத்தீவு கிறிஸ்துமஸ் ஈவ் இரவு விருந்து மற்றும் தின பிரஞ்ச் நிகழ்ச்சிகளைநேரடி இசைமற்றும் பாரம்பரிய பண்டிகை உணவுகள் நடத்துகிறது. இவ்வாறு துபாய், கிறிஸ்துமஸ் பருவத்தின் உணவுகள், மனநிறைவு மற்றும் குடும்ப ஒற்றுமையை அனுபவிக்க சிறந்த முன்னணி இடமாக விளங்குகிறது.



Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

# அரூரில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம்: நீண்டநாள் கனவை நனவாக்கிய முதல்வர் மு.க. ஸ்டாலின், திருமாவளவனுக்கு எம்.பி. ஆகியோருக்கு மக்கள் நன்றி!



தர்மபுரி மாவட்டம் அரூரில் நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வந்த கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைப்பிற்கான அரசாணை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. இதன் மூலம் அப்பகுதி மக்கள், குறிப்பாக பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நீதிச் சேவை விரைவாகவும் திறம்





படவும் கிடைக்கும் என வழக்கறிஞர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசாணை வெளி வந்ததை அடுத்து, அரூர் பகுதி மக்கள் மற்றும் வழக்கறிஞர்கள் முதல்வர் மு.க. ஸ்டாலின் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் எழுச்சித் தமிழர் திருமாவளவன் ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துள்ளனர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சமத்துவ வழக்கறிஞர் சங்க மாநில துணைச் செயலாளர் அ. வடிவேலன் தெரிவித்ததாவது: "அரூர் மக்களின் நீண்டநாள் கனவு இன்று நனவாகியுள்ளது. இது தமிழக அரசின் நீதித்துறை மேம்பாட்டுக்கான ஒரு முக்கிய முன்னேற்றம்" இந்தநீதிமன்றம் அமைக்க பரிந்துரை கடந்த நவம்பர் 26 ஆம் தேதி மதுரையில் நடைபெற்ற சமத்துவ வழக்கறிஞர் சங்க மாநில மாநாட்டின்போது முதலமைச்சருக்கு வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது.

அரூர் அம்பேத்கர் நகரைச் சேர்ந்த பாலன் மற்றும் செல்வராஜி ஆகியோர் இந்த முயற்சியில் முக்கிய பங்காற்றியுள்ளனர். மேலும், திருமாவளவன்தலைமையிலான விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பரிந்துரைகள் இந்த அரசாணை வெளியீட்டில் இருந்ததாகவும் குறிப்பிடப்படு கிறது .

வடிவேலன்மேலும் கூறியதாவது:

"மாநாட்டின்போது அரூர்கூடுதல்அமர்வு நீதிமன்றம் குறித்து மனுவாக கோரிக்கை அளித்தோம். அதனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு விரைவாக அரசாணை வெளியிட்டுள்ளது. நீதிமன்றம் அமைந்தால் பாப்பிரெட்டிப்பட்டி–அரூர் வட்டப்பகுதிகளில் நிலுவையில் உள்ள வழக்குகள் தாமதமின்றி தீர்க்கப்படும்; தொலைதூரம்செல்ல வேண்டிய அவசியம் இல்லாதபடியாகும்."அதேபோல்,

இந்த முயற்சிக்காக அரூர் வழக்கறிஞர் சங்கத்தின் முன்னாள் உறுப்பினரும் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியுமானஅம்மா பானுமதி, மற்றும் முதல் தீர்மானத்தை இயற்றிய முன்னாள் சங்கத் தலைவர் அருலியார் வேடியப்பன் ஆகியோருக்கும் நன்றி தெரிவிக்கப் பட்டுள்ளது.

தற்போதுசங்கத்தை வழிநடத்தி வரும் தலைவர் முத்துராஜ் மற்றும் செயலாளர் தவமணி உள்ளிட்ட வழக்கறிஞர்களும் பாராட்டப்பட்டுள்ளனர்.

இந்த செய்தியை தொடர்ந்து வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த செய்தி ஊடகங்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணையின் அடிப்படையில், இந்த கூடுதல் மாவட்ட நீதிமன்றம் இந்த மாத இறுதிக்குள்ளாகவோ அல்லது ஜனவரி முதல் வாரத்திலோ செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





தமிழ்நாடு மின்சார வாரியம் கடையநல்லூர் மின் கோட்டத்தின் சார்பில் கடையநல்லூர் அருகே உள்ள துரைச்சாமிபுரம் பேருந்து நிலையத்தில் இருந்து இடைகால் மீனாட்சி சுந்தரம் ஞாபகார்த்தமேல்நிலைப்பள்ளிவரைமதுரைகொல்லம்தென்காசிதேசியநெடுஞ்சாலையில் மின்சார சிக்கன விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. பேரணியை கடையநல்லூர் மின் கோட்ட செயற்பொறியாளர் கற்பக விநாயக சுந்தரம் தலைமை தாங்கி கொடியசைத்து துவக்கிவைத்தார் .



திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் அருள்மிகு தில்லாபுரியம்மன்அம்மன்திருக்கோயிலில்அம்மாவாசைவழிபாடு அன்னதான குழு சார்பாக மாதம் தோறும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டுகிறத



கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியலினை அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார்க.கிரியப்பனவர் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில்கூடுதல்ஆட்சியர்(வளர்ச்சி) சங்கேத் பல்வந்த் வாகே மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) . மகேஸ்வரி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கிறிஸ்துமஸ் விழாவையொட்டி கோவையில்

## மு.ம.சண்முகசுந்தரம் நினைவு அறக்கட்டளை சார்பில் தூய்மைப்பணியாளர்களுக்கு புத்தாடைகள்!

கோவை டிச.21

கிறிஸ்துமஸ் விழாவையொட்டி கோவை இராமநாதபுரத்தில், முமச அறக்கட்டளை மற்றும் குட் ஸ்மார்ட் கிளப் சார்பில், கோவை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் 200 க்கும் மேற்பட்டோருக்கு புத்தாடைகள் மற்றும் அறுசுவை அசைவ உணவுகளை திமுக கோவை மாநகர் மாவட்ட பொதுக்குழு உறுப்பினரும், அறக்கட்டளை தலைவருமான முமச.முருகன், கோவை மாநகராட்சி பணிகள் குழு தலைவர் சாந்தி முருகன் ஆகியோர் வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில், திமுக பொதுக்குழு தலைவர் வெந.உதயகுமார், வார்டு செயலாளர் சண்முகசுந்தரம், ரஞ்சித், ராஜசேகர், பிரதீப், AE சிபி, தனபால், ராகம் கருப்புசாமி, சுகாதார ஆய்வாளர் ஜெகன்நாதன், கார்த்திகேயன், கிறிஸ்துவ கிளப் சகோதரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## கடைகளில் தமிழ் பெயர்களை வைக்க கோரி விழிப்புணர்வு பேரணி!

தூத்துக்குடி டிச.21

தூத்துக்குடியில் வியாபார தலங்களில் தமிழ் பெயர்களை எழுத வேண்டும் என விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

தூத்துக்குடி தமிழ் ஆட்சி மொழிச்சட்டம் இயற்றப்பட்ட நாளை நினைவு கூறும் வகையில் ஆட்சி மொழிச் சட்ட வாரம் 17 ந்தேதி முதல் 27 ந்தேதி வரை நடைபெறுகிறது. இதில் இரண்டாம் நாள் வியாபார தலங்களில் தமிழ்ப்பெயர்களை எழுத வேண்டும் என கோரி விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. தூத்துக்குடி பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் வைத்து துவங்கி பேரணியை. தமிழ் வளர்ச்சித்துறை துணை இயக்குனர் இளங்கோ தலைமையில் தொழிலாளர் உதவி ஆணையர் மின்னல்கொடி கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்தபேரணி தூத்துக்குடி உதவி ஆட்சியர் அலுவலகம் வழியாக கடற்கரை சென்று சேர்ந்தது. செல்லும் வழியில் வியபாரத்தலங்களில் தமிழ்ப்பெயர்களை வைக்க வேண்டும் என அறிவுருத்தும் வகையில் துண்டு பிரசுரம் வழங்கப்பட்டு. ஆட்சிமொழித் தொடர்பான வாசகங்களுடன் கூடிய பாதாகைகளை பிடித்துக்கொண்டு கல்லூரிமாணவமாணவிகள்விழிப்புணர்வு பேரணியில் கலந்துகொண்டனா். பேரணி துவங்கும் முன்பு தமிழ் மொழி குறித்து மாணவர்களிடம் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குனர் இளங்கோ துவக்கவுரையாற்றினார். இறுதியில் தமிழ் வளர்ச்சி குறித்து உறுதிமொழி எடுக்கப் பட்டது.

நிகழ்ச்சியில் எழுத்தாளர்கள் முத்தாலங்குறிச்சி காமராசு, மாரிமுத்து, ஜெகஜீவன் ராம், திருக்குறள் பேரவை அன்பழகன், அய்யனராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கப் பட்டது.

## பிரிட்டானியா மில்க் பிக்கிஸ்: 'ஸ்பெஷல் எடிஷன் சூப்பர் ஸ்டார் பிஸ்கட்' வெளியீடு!

நெல்லை டிச.21

அடேங்கப்பா கதைகள் 2.0 முன்முயற்சியின் வெற்றியுடன், பிரிட்டானியா மில்க் பிக்கிஸ் அதன் பேக்குகளில் புதிய ஸ்பெஷல் எடிஷன் சூப்பர் ஸ்டார் பிஸ்கட்டைஅறிமுகப்படுத்தியுள்ளது. இந்தபுதியபிஸ்கட், தமிழ்நாட்டுடன் பிரிட்டானியாவின் நீண்டகால பிணைப்பை மேலும் ஆழப்படுத்துவதோடு, தமிழின் பெருமை மற்றும் கதைசொல்லும் கலாச்சாரத்தை கொண்டாடுகிறது. நுகர்வோர் QR குறியீட்டை ஸ்கேன் செய்து சிறப்பு கதைகளை அறிந்து கொள்ளலாம்; பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் இதன் மூலம் பரிசுகள் மற்றும் ஹாங்காங்கிற்கு பயணவாய்ப்பையும் பெறலாம். டேலண்ட்டட் நிறுவனம் கருத்தாக்கிய இந்த முயற்சி, அடேங்கப்பா கதைகள் 2.0இன் மையக்கருவாக உள்ளது. ஜெனரேட்டிவ் செயற்கை நுண்ணறிவு (GenAI) மூலம், அன்றாட பொருட்கள் மூலம் கதைகளில் கற்பனையை ஊக்குவித்து, குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு புதிய அனுபவங்களை வழங்குகிறது. பிரிட்டானியா நிறுவனத்தின் மார்க்கெட்டிங் பிரிவின் பொது மேலாளர் சித்தார்த் குப்தாகூறுகையில்: "பிரிட்டானியாமில்க்பிக்கிஸ் எப்போதும் தமிழக குடும்பங்களின் இதயங்களில் சிறப்பிடம் பெற்றுள்ளது. இந்த ஸ்பெஷல் எடிஷன் பிஸ்கட் மூலம் மக்கள் மகிழ்ச்சியுடனும் கற்பனைமிக்க கதைகளுடன்இணைந்தஅனுபவத்தைஅனுபவிப்பார்கள். தமிழ்நாட்டுடன் நாங்கள் கொண்ட அழகிய பந்தத்தை இது மேலும் வலுப்படுத்துகிறது," என்று அவர் தெரிவித்தார்.

## "சேலத்தில் KTM 160 Duke – ஆன்டிராக் டெஸ்ட் ரைட் அனுபவம்!"



சேலம் டிச.21

உலகின் நம்பர் 1 பிரீமியம் மோட்டார் சைக்கிள் பிராண்டான KTM, ORANGE XP160 ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இது KTM 160 Dukeஇன் உண்மையான செயல்திறனை, வருங்கால வாடிக்கையாளர்களும் ரைடிங் ஆர்வலர்களும் உண்மையான டிராக்கில் அனுபவிக்க உருவாக்கப்பட்ட, முதன்முறையான ஆன்டிராக் டெஸ்ட் ரைட் அனுபவம் ஆகும். KTM நிபுணர்களின்வழிகாட்டுதலுடன், பாதுகாப்பான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் Duke 160ஐ சவாரி செய்யும் வாய்ப்பை இது வழங்குகிறது. நவம்பர் 29, 2025 அன்று புனேவில் தொடங்கப்பட்ட ORANGE XP160, இந்தியா முழுவதும் 40+ நகரங்களுக்கு விரிவடைகிறது, அதன் ஒரு பகுதியாக நாளை சேலம் நகரத்தில் நடைபெறுகிறது. முக்கிய நகரங்களின் கோகார்ட் டிராக்குகளில் நடத்தப்படும் இந்த அனுபவம், கார்னரிங், பிரேக்கிங், த்ரோட்டில் கட்டுப்பாடு போன்ற ரைடு & லெர்ன் அமர்வுகள் மற்றும் திறன் சார்ந்த சவால்கள் மூலம் Duke 160ன் ரேசிங் ஆனடாமியை வெளிப்படுத்துகிறது. KTM 160 Duke, 164.2cc திரவகுளிரூட்டப்பட்ட எஞ்சின் மூலம் 19 PS பவர் மற்றும் 15.5 Nm டார்க் வழங்குகிறது. பஜாஜ் ஆட்டோ லிமிடெட் நிறுவனத்தின் புரோபைக்கிங் தலைவர் மாணிக் நங்கியா, "ORANGE XP160 KTM அனுபவத்தை பெறுவதற்கான முற்றிலும் புதிய வழி; இது இந்தியாவின் அடுத்த தலைமுறை ரைடர்களுக்கு KTM செயல்திறன் நெறிமுறைகளை நேரடியாக கொண்டு செல்கிறது" என தெரிவித்தார்.

## "லம்போர்கினி எஸ்பீரியன்சா ஜிரோ 2025: இந்தியா முழுவதும் ஆவல், வேகம் கொண்ட பயணம்"!



சென்னை டிச.21

லம்போர்கினி எஸ்பீரியன்சா ஜிரோ இந்தியா (Lamborghini Esperienza Giro India) நிகழ்வு 5வது முறையாக வெற்றிகரமாக நடைபெற்றது. வட மற்றும் தென்னிந்தியாவின் சாலைகளில் 80க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் மூன்று நாட்களில் 1,500 கிலோ மீட்டர் பயணம் மேற்கொண்டனர். இதில் முதல் முறையாக, இரண்டு தனித்தனியான வழித்தடங்கள் அமைக்கப்பட்டு, டெல்லி மும்பை மற்றும் பெங்களூரு பகுதிகளில் வாடிக்கையாளர்கள் பங்கேற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. வட இந்திய வழித்தடம் ஹரியானா, ராஜஸ்தான் மற்றும் உத்தரபிரதேசத்தின் கலாச்சார மற்றும் இயற்கை அழகுகளை கொண்டு சென்று, பார்வாரா கோட்டை மற்றும் தாஜ்மஹால் போன்ற முக்கிய வரலாற்று இடங்களை அணுகியது. தென்னிந்திய வழித்தடம் பெங்களூருவில் துவங்கி, கர்நாடகாவின் கோர்க் மலைகள் மற்றும் மைசூர் அரண்மனை உள்ளிட்ட கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை காட்டியது. இரு பயணங்களும் வாடிக்கையாளர்களுக்கு அபூர்வமான சாலை அனுபவங்களையும் பிரத்தியேக நிகழ்வுகளையும் வழங்கின.

## மில்லியன் கணக்கானோருக்கு சேவை, இலட்சக்கணக்கான போருக்கு வேலைவாய்ப்பு: 2025 பண்டிகைக் காலத்தில் பிளிப்கார்ட்டின் விநியோகச் சங்கிலி சாதனை!



சென்னை , டிச.21

இந்தியாவின் உள்நாட்டு இகாமர்ஸ் நிறுவனமான பிளிப்கார்ட், 2025 பண்டிகைக் காலத்தில் தனது விநியோகச் சங்கிலி மூலம் சாதனை அளவிலான செயல்பாடுகளை நிறைவேற்றியதாக அறிவித்துள்ளது. தி பிக் பில்லியன் டேஸ் காலகட்டத்தில், அதே நாள்/அடுத்த நாள் டெலிவரியில் 44% வளர்ச்சியும், ஒரே நாளில் 7.3 மில்லியனுக்கும் அதிகமான ஆர்டர்கள் விநியோகிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக 2 மற்றும் 3ஆம் அடுக்கு நகரங்களிலிருந்து வந்த அதிகரித்த தேவை, பிளிப்கார்ட்டின் பிராந்திய விரிவாக்கத்தையும் தொழில்நுட்ப வலிமையையும் வெளிப்படுத்தியது. ஏஐ மற்றும் மெஷின் லேர்னிங் அடிப்படையில் முன்கணிப்பு, தானியங்கி கிடங்கு செயல்பாடுகள், ரோபோடிக்ஸ் மற்றும் மேம்பட்ட ஜியோ கோடிங் தொழில்நுட்பங்கள் ஆகியவை இந்த உச்ச நேர விநியோகங்கள் தடையின்றி கையாள உதவின. இதன் ஒரு பகுதியாக, 4 இலட்சத்திற்கும் அதிகமான பருவகால வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, நாட்டின் தொலைதூர பகுதிகளில்விரைவானவிநியோகத்தை உறுதி செய்வதுடன், 4 லட்சத்திற்கும் அதிகமான புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறேன்," என்றார்.

## "தமிழக அரசு – HCL GUVI இணைந்து நான் முதல்வன் UI/UX ஹேக்கத்தான் மூலமாக 4,500+ மாணவர்களை பயிற்சி அளிக்கிறது!

சென்னை டிச.21

IIT மெட்ராஸ் மற்றும் IIMஅஹமதாபாத் இன்குபேட் உருவான எட்டெக் நிறுவனம் HCL GUVI, தமிழ்நாடு அரசுடன் இணைந்து நான் முதல்வன் திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் UI/UX ஹேக்கத்தான் 2025ஐ நடத்தி 4,500 மாணவர்களின் திறன்களை உயர்த்தியது. இந்த முயற்சியில் மாணவர்கள் பயனர் ஆய்வு, வயர்ஃப்ரேமிங், புரோட்டோடைப்பிங் மற்றும் வடிவமைப்பு பிரச்சினை தீர்வு ஆகிய திறன்களில் பயிற்சி பெற்றனர். TNSDC உடன் இணைந்து, நிலை 1ல் 2,355 மாணவர்கள் பங்கேற்று 1,200 பேர் நிலை 2க்கு முன்னேறினர்; 167 இறுதிப் போட்டியாளர்கள் சென்னையில் நடந்த ஆஃப்லைன் இறுதிப் போட்டியில் போட்டியிட்டனர். MIT – கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையிலிருந்து வெற்றி பெற்ற அணியில் கார்த்திக் ராஜா A, துரைசிங் J, நடாஷா அஸ்மி, நாகராஜ் NA மற்றும் கீர்த்தினி E இருந்தனர். University College of Engineering, Panrutiஇல் இரண்டாம் இடம் பெற்ற அணியில் P. பாலாஜி, T. ஜெயசுதா, S. சஞ்சய், V. மாலினி மற்றும் V. திவ்யா சேர்ந்தனர். மாணவர்கள் ஹேக்கத்தானுக்கு முன் 12 படிகளில் 45 மணி நேர UI/UX பயிற்சியைப் பெற்றனர். இறுதிச் சுற்று நிகழ்வில் தொழில்துறை நிபுணர்கள், ஊடக பிரதிநிதிகள் மற்றும் HCL GUVI குழுவினர் கலந்து மாணவர்களின் திறமையை பாராட்டினர்.



## திருவெண்ணெய்நல்லூர் அருகே

# பிரதம மந்திரி கிராம சாலை திட்ட 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாசாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி!

### ஆ.ஜெ.மணிகண்ணன் எம்.எல்.ஏ. கொடியசைத்து துவங்கி வைத்தார்!!

திருவெண்ணெய்நல்லூர், டிச.21

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள ஆமூர் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் பிரதம மந்திரி கிராம சாலை திட்டம் துவங்கி 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவினை முன்னிட்டு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆமூர் ஊராட்சியில் பிரதம மந்திரி கிராம சாலை திட்டத்தின் கீழ் ஆமூர் தாமல் திருநருங்குன்றம் வரை ரூபாய் 1 கோடியே 99 லட்சத்தில் கிராம சாலை அமைக்கப்பட்டதாலும் பிரதம மந்திரி கிராம சாலை திட்டம் துவங்கி 25 ஆண்டுகள் நிறைவடைந்து வெள்ளி விழாவினை முன்னிட்டு இந்த சாலையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முல்லை, பாலசுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர் (சாலை மற்றும் பாலங்கள்) கிருஷ்ணகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிகண்ணன் கலந்துகொண்டு பேரணியை கொடியசைத்து துவங்கி வைத்தார். பேரணியில் போதைப் பொருள் இல்லா பயணம், தலைக்கவசம் அணிதல், சாலை விதிகளை பின்பற்றுதல் உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி பேரணியாக சென்றனர்.

இதில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அருளானந்தம், ஒன்றிய கவுன்சிலர் ஜெயந்திசக்திவேல், ஊராட்சி மன்ற தலைவர் வீரப்பன், துணைத் தலைவர் ரோஸ்மா, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சக்கரவர்த்தி, ஒன்றிய மாணவர் அணி துணை அமைப்பாளர் ஏழுமலை உள்பட பலர் கலந்து கொண்டனர்





கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழகத்திற்கு உட்பட்ட வழக்கறிஞர் அணி மாவட்ட நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் ஆலோசனைக்கூட்டத்தில், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் கலந்துகொண்டு வெளியான வரைவு வாக்காளர் பட்டியலை உன்னிப்பாக கவனித்து விடுபட்டவர்கள் பற்றிய முழுமையான தகவல்களை சேகரித்து நமது கழக நிர்வாகிகள் உரிய முறையில் இணைத்திட, வழக்கறிஞர் அணி நிர்வாகிகளும் முனைப்புடன் செயலாற்றுவது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

# வாணியம்பாடி மின் கோட்ட செயற் பொறியாளர் அலுவலகம் முன்பாக விவசாயிகள் முற்றுகைப்போர்!



வாணியம்பாடி டிச.21

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி. விவசாய நிலத்திற்கான இலவச மின் இணைப்பு பெற தட்கல் முறையில் டி.டி எடுத்து வந்தும், தட்கல் முடிந்து விட்டதாக அதிகாரிகள் கூறியதால், மின் இணைப்பு வழங்கக்கோரி விவசாயிகள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி மின்சார வாரியம் சார்பில் விவசாயிகளுக்கு தட்கல் மின்சாரம் விரைவு மின்சாரம் பெற விண்ணப்பிக்கலாம் என்றும், அதற்கு திருப்பத்தூர் மேற்பார்வை பொறியாளர் பெயருக்கு ரூபாய் 3 லட்சம் வரை வரைவு காசோலை எடுக்க வேண்டும் என்றும் கடந்த 16 ஆம் தேதி அறிவிப்பு வெளியிட்டது.

இந்த நிலையில், கடந்த செவ்வாய்கிழமை 16 ஆம் தேதி முதல் வாணியம்பாடி, நாட்றம்பள்ளி, கேத்தாண்டபட்டி, தும்பேரி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்கள் ஆடு, மாடுகளை விற்றும், தங்கள் நகைகளை வங்கியில் அடகு வைத்தும், ரூபாய் 3 லட்சம் வரைவோலை எடுத்து, வாணியம்பாடி மின்வாரிய செயற் பொறியாளர் அலுவல கத்திற்கு வந்து கொடுத்த போது, அந்த சேவை முடிந்து விட்டது என்று கூறியதால், ஆத்திரம் அடைந்த விவசாயிகள், அறிவிப்பு விட்டு 2 நாட்கள் ஆகிறது. அதில் ஒருநாள் மின் துண்டிப்பு ஏற்பட்டது. ஒரே நாளில் எப்படி வரைவு காசோலை எடுத்து விண்ணப்பிக்க முடியும், அறிவிப்பு வெளியிட்ட மறுநாளே எதற்காக சேவை நிறுத்தப்பட்டது என்று மின்வாரிய செயற் பொறியாளருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

அதன் பின்னர், அலுவலகத்தை முற்றுகையிட்டு அலுவலகம் முன்பு அமர்ந்து தர்ணா போராட்டம் நடத்தினர்.

இதனால் அங்கு பரபரப்பான சூழல் நிலவியது. பின்னர் அங்கு வந்த செயற்பொறியாளர் இங்கு 10 ஆயிரம் பேர் என்ற இலக்கில் அறிவிப்பு வெளியிட்டதாகவும், தற்போது 14 ஆயிரம் பேர் வரை வரைவோலை எடுத்து விண்ணபித்து ள்ளதாகவும் தங்கள் வரைவோலை நகல் எடுத்து அலுவகத்தில் கொடுத்து செல்லுங்கள் அதை மேலதிகாரி களிடம் பேசி இது குறித்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்த பின்னர், விவசாயிகள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# "இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48" திட்டத்தில் தர்மபுரியில் இதுவரை 7,427 பேர் சிகிச்சை பெற்று பயன்!



தருமபுரி, டிச. 21

தருமபுரி மாவட்டத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் "இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் +8" திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட 5 அரசு மருத்துவமனைகள் மற்றும் 7 தனியார் மருத்துவமனைகளில் விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள் சிகிச்சைப் பயனடைந்துள்ளனர். 7,427 பெற்று

இதுகுறித்து கலெக்டர் ரெ.சதீஸ் தெரிவித்துள்ளதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த 18.12.2021 அன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், சாலை விபத்தால் ஏற்படும் உயிரிழப்பைக் குறைத்திட, விபத்து ஏற்பட்ட முதல் 48 மணி நேரத்திற்குள் கட்டணமில்லா உயிர் காக்கும் அவசர சிகிச்சைக்கான "நம்மைக் காக்கும் 48" திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தில் விபத்தினால் பாதிக்கப்பட்டவர் சாலை உள்நோயாளியாக அனுமதிக்கப்படும் மருத்துவமனையிலேயே முதல் 48 மணி நேரம் வரை அங்கீகரிக்கப்பட்ட சிசிக்சை முறைகளில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. 48 மணி நேரத்திற்கு மேலும் சாலை விபத்தில் பாதிக்கப்ப ட்டவர் நிலைய ற்றவராக இருக்கும்பட்சத்தில் அல்லது தொடர் சிகிச்சை நடைமுறைகள் தேவைப்பட்டால், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட இருந்தால், நோயாளி மேற்கொள்ளும் சிகிச்சை காப்பீட்டுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தால், நோயாளியை நிலைப்படுத்தி அந்த மருத்துவமனையிலேயே மேலும்சிகிச்சை தொடரலாம். குறிப்பாக, முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத்திட்ட பயனாளியாக இல்லாமல் இருந்தால், நோயாளி மேற்கொள்ளும் சிகிச்சை காப்பீட்டுத் திட்டத்தில் இல்லை என்றால், நோயாளியை நிலைப்படுத்தி அரசு மருத்துவமனைக்கு மாற்றி சிகிச்சையை தொடரலாம். கட்டணமில்லாமல் தருமபுரி மாவட்டத்தில் சாலை விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்கள் "இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48" திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட 5 அரசு 7,427 மருத்துவமனைகள் மற்றும் 7 தனியார் மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட 5 அரசு மருத்துவமனைகள் மற்றும் 7 தனியார் மருத்துவமனைகளில் சிறப்பான சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் ரெ.சதீஸ் தெரிவித்தார்.

## வாணியம்பாடி அடுத்த உதயேந்திரம் பேரூராட்சி பகுதியில்

# என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை!



வாணியம்பாடி, டிச.21

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி உதயேந்திரம் பேரூர் 1 வது வார்டு குந்தாணி மேட்டில் பூத் எண் 140 ல் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரையில் SIR பணிகள் குறித்தும், புதிய வாக்காளர்களை சேர்ப்பது குறித்தும் மற்றும் அரசின் சாதனைகளை பொது மக்களிடம் எடுத்து கூறும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு உதயேந்திரம் பேரூர் திமுக செயலாளர் ஆ.செல்வராஜ் தலைமை வகித்தார். அவைத் தலைவர் சி.குமார் மற்றும் மாவட்ட ஆதி ஆதிதிராவிட நலக்குழு துணை அமைப்பாளர். கோ.வி.அசோகன், தென்றல் தமிழரசன், கிளை செயலாளர். வி.ரவி, வி.கோபிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பிரதிநிதிகள் டி.அம்பலவாணன், எம்.es.மேகநாதன், இளைஞரணி சி.சிலம்பரசன், மாவட்ட துணை அமைப்பாளர். பி.குமரேசன், வி.முருகன், பேரூர் திமுக நிர்வாகிகள் மீர் முகம் மது கனி, ஏ.ஜோசப் தாஸ், வி.சசிகுமார், பி.செந்தில், ஏ.ரமேஷ், ஏ.இளையா, ஏ.இசை குமார், இளங்கோ, ஜி.சௌந்தர், எம்.ஆனந்தன் மற்றும் கிளைக் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இதில் BLA2 , BLC நிர்வாகிகள், கட்சி நிர்வாகிகள், மகளிர் அணியினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# 7 இருக்கைகள் கொண்ட புதிய கார் 'கிராவிட்': இந்தியாவில் நிசான் விரைவில் அறிமுகம்!



கோவை, டிச.21

இந்திய வாகனச் சந்தையில் தனது ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டும் வகையில், நிசான் நிறுவனம் தனது புதிய 7இருக்கைகள் கொண்ட பிஎம்பிவி பிரிவில் 'கிராவிட்' என்ற பெயரில் புதிய காரை அடுத்த ஆண்டு துவக்கத்தில் அறிமுகம் செய்யவுள்ளது. இன்றைய கால இந்தியக் குடும்பங்களின் தேவைகளை முழுமையாக ஆய்வு செய்து இந்த கார் உருவாக்கப்பட்டுள்ளது. அதிக இடவசதி, மாற்றியமைக்கக்கூடிய இருக்கை வசதிகள் மற்றும் குறைந்த விலை என நடுத்தர குடும்பங்களுக்கு ஏற்ற ஒரு முழுமையான காராக இது இருக்கும் என இந்நிறுவனம் தெரிவித்துள்ளது. நிசான் மோட்டார் இந்தியா நிறுவனம் கடந்த 2024 ஜூலை மாதமே தனது எதிர்காலத் திட்டங்களை வெளியிட்டிருந்தது. அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள முக்கிய மாடல்கள் பின் வருமாறு: 7 இருக்கைகள் கொண்ட கிராவிட் கார் 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அறிமுகம்; டெக்டன் அடுத்த ஆண்டின் மத்தியில் அறிமுகம்; 7 இருக்கை கொண்ட சிஎஸ்யூவி 2027ம் ஆண்டின் துவக்கத்தில் அறிமுகம் என கூறியிருந்தது. இந்திய வாடிக்கையாளர்களுக்குப் புத்தம் புதிய மற்றும் நவீன ரகக் கார்களைத் தொடர்ந்து வழங்க நிசான் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த கிராவிட் அறிமுகம், அந்நிறுவனத்தின் வளர்ச்சிப் பாதையில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது. "கிராவிட்" என்ற இந்தப் பெயர் 'கிராவிட்டி' என்ற சொல்லில் இருந்து ஈர்க்கப்பட்டது.



பாரதிய ஜனதா கட்சி மகளிர் அணி சேலம் கோட்டத்துக்கு உட்பட்ட மாவட்ட தலைவிகள் மாவட்ட நிர்வாகிகள் அறிமுக மற்றும் ஆலோசனை கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. ஆலோசனைக் கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக திருமதி கவிதா ஸ்ரீகாந்த் மாநில தலைவர் மகளிர் அணி பாரதிய ஜனதா கட்சி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். மாவட்டத் தலைவர் சரவணன் முன்னிலை வகித்தார் நகர தலைவர் P.சாய் ஆறுமுகம் மாவட்ட பொதுச் செயலாளர் இளைஞர் அணி ஹனிபா முகமத் OBC மாவட்ட தலைவர் சசிகுமார் விளையாட்டு அணி தலைவர் அருண் குமார் தர்மபுரி மாவட்ட மகளிர் அணி தலைவி கலையரசி நகர இளைஞரணி தலைவர் விக்னேஷ் மத்திய அரசின் நலத்திட்ட பிரிவு சுரேஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.

# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தை தவிர்த்து விட்டு எந்த ஒரு கூட்டணியும் ஆட்சி அமைக்க முடியாது!

### தருமபுரியில் பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் பேட்டி!!



தர்மபுரி, டிச.21

தருமபுரியில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் டி டி வி தினகரன் தலைமையில் தருமபுரி சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட டிடிவி தினகரன் தருமபுரி சட்டமன்ற தொகுதி அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக தர்மபுரி மாவட்ட செயலாளர் டி கே ராஜேந்திரன் அவர்களை அறிவித்தார். இதனைத் தொடர்ந்து செய்தியாளரிடம் பேசிய அவர்.

முன்னாள் அமைச்சர் வைத்தியலிங்கம் தமிழக வெற்றி கழகத்திற்கு செல்வதாக தகவல் வெளியாகி உள்ளது என்ற கேள்விக்கு அவர் உறுதியாக செல்ல மாட்டார். வைத்தியலிங்கம்நிதானமாக முடிவு எடுக்கக் கூடியவர்.

நீதிபதிமேல் அதிகமாக சொத்து சேர்த்து இருக்கிறார்கள் இது போன்ற கரெக்ஷன் சம்பந்தமான குற்றச்சாட்டுகள் வரும் போது பதவி நீக்க நோட்டிஸ் வழங்குவார்கள் ஆனால் இது புதிதாக இருக்கிறது. நீதிபதி அவருக்கு உள்ள அதிகாரத்தில் அவர் ஒரு தீர்ப்பு சொல்றார் அதை ஏற்றுக் கொள்கிறோம் இல்லை என்பது அது தமிழ்நாடு அரசுடைய நிலைப்பாடு அதை எதிர்த்து மேல்முறையீடு செய்வது செயல்படுத்துவது அல்லது செயல்படுத்துவதால் அதை தொடர்ந்து பாதிப்புகளை உருவாக்கும் என மாநில அரசு நினைக்கின்ற பட்சத்தில் மேல்முறையீடு செய்வது தான் சாதாரணமாக நடக்க கூடியாது இது திமுக இன் ஸ்பீச்மென்ட் கொண்டு சென்றிருக்கிறார்கள் என்றால் இது வித்தியாசமாகத் தான் தெரிகிறதுஏதோ ஒரு காரணத்திற்காக கொண்டு வந்திருக்கிறார்கள் அவர்களுக்கு பெரும்பான்மை இல்லை.

அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் எந்தக் கூட்டணியில் இடம்பெறுகிறது என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை. கூட்டணிக்கு தலைமை தாங்குகின்ற கட்சிகள் எங்களை அணுகி கூட்டணியில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் இடம்பெற வேண்டும் என்று பேசி வருவது உண்மை இறுதி வடிவம் பெற்ற பின் நாங்கள் எந்த கூட்டணிக்கு செல்வோம் என்ற முடிவை உறுதியாக ஊடகங்களுக்கு தெரிவிப்போம் .தா வெ க தலைவர் விஜயின் பயணம் எந்த அளவு வெற்றி பெறும் என்ற கேள்விக்கு பதில் அளித்த டிடிவி தினகரன் மக்கள் தீர்மானிக்க வேண்டியது இதற்காக நான் ஒரு ஏஜென்சியை நடத்தி எந்த கட்சி வெற்றி பெறும் என்று பதில் சொல்ல முடியும் .அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் இல்லாமல் எந்த ஒரு கூட்டணியும் ஆட்சி அமைக்க முடியாது .வெற்றி பெறவும் முடியாது. இவ்வாறு அவர் கூறினார். இந்த கூட்டத்தில் கழக ஆட்சி மன்ற குழு தலைவர் ஆர். ஆர். முருகன் ,மாநில சுற்றுச்சூழல் அணியின் செயலாளர் ஆர். பாலு, ஒன்றிய கழக செயலாளர் பாஸ்கர், குமார், கணேசன், டி .கே. ஆர்.ரமேஷ், நகரச் செயலாளர் பார்த்திபன் மற்றும் மாநில ,மாவட்ட, நகர, பேரூர், ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



தர்மபுரி அடுத்த பைசுஹள்ளியில் செயல்பட்டு வரும் பெரியார் பல்கலைக்கழக பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்தில் இயற்பியல் துறை சார்பாக நானோ கட்டமைக்கப்பட்ட பாரம்பரிய ஆயுர்வேத மருந்து மற்றும் நிற மாலையில் மூலம் அதன் சரிபார்ப்பு குறித்து என்ற தலைப்பில் ஒரு நாள் சிறப்பு சொற்பொழிவு கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. முனைவர் பிரசாத் வரவேற்பு உரை நிகழ்த்தினார் முனைவர் செல்வ பாண்டியன் இயற்பியல் துறை இயக்குனர் பொறுப்பு தலைமை உரை நிகழ்த்தினார் முனைவர் சந்தோஷ் குமார் இயற்பியல் துறை காஞ்சி மாமுனிவர் அரசு முதுகலை பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் புதுச்சேரி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு கருத்துரை வழங்கினார் முனைவர் கோபாலகிருஷ்ணன் நன்றியுரை வழங்கினார் நிகழ்வை இரண்டாம் ஆண்டு இயற்பியல் துறை மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர் முனைவர் செந்தில் உடன் இருந்தார்



பெரியார் பல்கலைக்கழகப் பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், தர்மபுரி ஆங்கிலத்துறை சார்பில் மகாகவி பாரதியார் பிறந்தநாள் மற்றும் தேசிய மொழிகள் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்விற்கு ஆராய்ச்சி மைய இயக்குநர், பேராசிரியர் முனைவர் மா. செல்வபாண்டியன், சி. கோவிந்தராஜ், பி. கிருத்திகா உதவி பேராசிரியை, மற்றும் மீனா, முனைவர் டி. சரண்யா எம். பியூலா, வரவேற்புரையாற்றினார். இறுதியாக நன்றியுரையை இரண்டாம் ஆண்டு மாணவி எம். ஆனந்தலட்சுமி வழங்கினார். நிகழ்ச்சியை கே. தினேஷ்குமார், தொகுத்து வழங்கினார். நிகழ்விற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் . தினேஷ்குமார், பி. பாலச்சந்தர், பி. மோகன்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.